சாவகச்சேரி பிரதேசசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமா்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மாா்ச் 22 இல் கணக்காய்விற்காக சமா்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 10 இல் கணக்காய்விற்காக சமா்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளா் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பா் 02 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய சாவகச்சேரி பிரதேசசபை 2012 டிசெம்பா் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசாா் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி சாவகச்சேரி பிரதேச சபையின் 2012 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசாா் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூா்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

1.நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் செலவினங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | வருமானங்கள் | | செலவினங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | - | - | | - | - | | **01** | **311,154** |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 49,031 | 02 | 1,206,464 | 01 | 63,425 | | |
| வகைப்படுத்தல் வழு | 01 | 349,720 | - | | 01 | 4,200 | | |

ii. சபைக்கு சொந்தமான காணி கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 15இ831இ108 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 3இ139இ405 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 6இ265இ204 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

----------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 5இ096இ126 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 10இ958இ921 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

--------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான |
|---|---|---|---|

| --------------------------- | -------------------------- | ------------------------- | திரண்ட நிலுவைகள் ----------------------- |
| --- | --- | --- | --- |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 120 | 74 | 1,013 |
| குத்தகை வாடகைகள் | 9,005 | 9,672 | 75 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,405 | 1,644 | 18 |
| வேறு வருமானங்கள் | 34,054 | 28,098 | - |

2.3.2 நிலுவை வருமானம்.

--------------------------

மீளாய்வாண்டு டிசம்பர் 31ம் திகதிவரை வீதவரி, ஏக்கர் வரி, உரிமம், வாடகை குத்தகை போன்ற விடயங்களில் அறவிட வேண்டிய வருமான நிலுவை ரூபா 1,105,559 பெறப்பட வேண்டியுள்ளது.

2.3.3 வருமான அறவீடுகளின் வீழ்ச்சி

-------------------------------------------

(அ) கடந்த 18 வருடங்களாக வீதவரி அறவீட்டிற்காக ஆதனங்களின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சரசாலை கச்சாய் வரணி மற்றும் மிருசுவில் உப அலுவலகங்களில் வீதவரி அறவீடு இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டிருக்ககாமை வருமான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(ஆ) ஆதன பெயர் மாற்றம் செய்யும்போது விலை மதிப்பீட்டு திணைக்கள அனுமதியுடன் பெயர் மாற்றம் செய்யப்படாது தவிசாளரின் தற்துணிபில் கடந்த 18 வருடத்திற்கு மேற்பட்ட ஆதன பெறுமதியடிப்படையில் வீதவரி பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(இ) உரிமக் கட்டண அறவீடு தொடர்பான உரிய நடைமுறை பின்பற்றப்படாது உரிமம் கணக்கிடும்முறை பின்பற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3.4 வருமான பாதிப்பு

---------------------------

1999 ஆம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை மின்சார சயயிடம் கையளிக்கப்பட்டபோதும் பிரதேசசபையில் எல்லைக்குட்பட்ட மின் விளக்குகள் பொருத்துதல் சம்பந்தமாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் சபையின் நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 502இ922 மீணடுவரும் செலவினத்துக்கு மின்சார சபையினால் மீளளிப்பு கிடைக்காகைமயினால் சபைக்கு வருமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது

2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம்.

-----------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றத்திடமிருந்து மீளாய்வாண்டிற்கு கிடைக்கப் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணங்கள் ரூபா 249,133 வருமானமாகவும் வருமதியாகவும் சிட்டையிடப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதி வரையும் பெறப்பட்டிருக்கவில்லை.

2.3.6 முத்திரைத் தீர்வை கட்டணம்

-----------------------------------------

வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பீட்டு வருமானமாக மீளாய்வாண்டில் ரூபா 2,500,000 காட்டப்பட்டபோதும் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைத்தீர்வை கட்டண அறவீட்டு விபரங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

------------------------------------------

2.4.1 அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன்

-------------------------------------------------------------------

பதவி விலகிய, பதவி வறிதாக்கப்பட்ட அலுவலர்களது அறவிடவேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 10,819 கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் குறித்த தொகையை பிணைதாரரிடம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவீல்லை.

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | |
|---|---|
| (அ) <u>1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி</u> | <u>விபரம்</u> |
| (i) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 66 | செயலாளர் 1987 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 150(4)ம் பிரிவின் கீழ் நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் ஏஐஐஐ பிரிவு 02 உபபிரிவு 151 | நாளாந்தம் வரவுகள் உடனுக்குடன் வரவுகளின் வகை பற்றிய பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. 03மார்கழி 2012 – 05 மார்கழி 2012 ம் திகதி வரையான நாளாந்த சேகரிப்பு ரூபா 29,155 ஆனது 07 மார்கழி .2012ம் திகதி வரை வரவுகளின் வகை பற்றிய பதிவேட்டில் பதியப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 மார்ச் 07ம் திகதிய 2∴2006 இலக்க நிதி ஆணைக்குழு செயலாளரின் சுற்றறிக்கை | நினைவுச்சின்னம் ஒன்றிற்காக ஆகக் கூடியது ரூபா 12,500 செலவிட முடியுமாக இருந்த போதிலும் திறப்பு விழா நினைவுத்தகடு செய்தமைக்காக ரூபா 15,000 செலவிடப்பட்டிருந்தது. |
| (இ) 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரிவு 132(ஏ) | ஏதாவது ஆண்டொன்றில் ரூபா 1,000 இனை விஞ்சும் களியாட்ட, பொழுதுபோக்கு செலவினங்களுக்கு அமைச்சரின் முன் அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் உபசரணை செலவினம் ரூபா 48,588 இற்கு முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) <u>இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி</u> | |
| நிதி ஒழுங்கு விதி 571 | 5 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் ரூபா 557,352 இற்கு நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் |

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.6 சிக்கனமின்மையான செலவினம்

-----------------------------------------------------

சபையின் புதிய தலைமை அலுவலக பெயர் பலகை அமைப்பும் பெயர் பலகை நாட்டிய செலவினமாக ரூபா 92,710 செலுத்தியிருப்பது சபைநிதி பயன்பாட்டில் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

2.7 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------

2.7.1 செயற்திட்டம் நிறைவேற்றுவதில் காலதாமதம்

---------------------------------------------------------------------------

(அ) சபைநிதி வேலைகள் வருட ஆரம்ப காலங்களில் வேலை ஆரம்பிக்கப்படாது வருட இறுதியில் ஆரம்பிப்பதினால் மூலதன வேலைகள் குறித்த நிதியாண்டில் முடிவடையாதுள்ளது.

| செயற்திட்ட விபரம் | மதிப்பீட்டு கிரயம் | ஒப்பந்தம் செய்யப்பட்ட திகதி | வேலை முடிவடைய வேண்டிய காலம் | திட்டம் முடிவடை யாமைக்கு காரணம் |
|---|---|---|---|---|
| காந்தி சனசமூக நிலைய திருத்தம் | 100,000 | 01.12.2012 | 31.12.2012 | சீரற்ற காலநிலை |
| முருகன் கோயில் வீதி | 60,000 | 01.11.2012 | 01.01.2013 | சீரற்ற காலநிலை |
| கைதடி சிறுவர் பூங்கா வேலி | 250,000 | 27.08.2012 | 27.10.2012 | சீரற்ற காலநிலை |
| ஓட்டு வெளி வயல் வெளி வீதி | 200,000 | 20.12.2012 | 31.12.2012 | சீரற்ற காலநிலை |
| கொலனி பொது கிணறு | 50,000 | 20.12.2012 | 20.02.2013 | சீரற்ற காலநிலை |

(ஆ) வரவு செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத இரண்டு மூலதன வேலைகளின் பெறுமதி ரூபா 100,000 மீளாய்வாண்டு காலத்தில் சபை நிதியினால் நிறைவேற்றப்பட்டுள்ளது

(இ) கொடிகாமம் பொதுச் சந்தையில் மலசல கூடம் அமைப்பதற்காக வரவு செலவுத்திட்டத்தில் ரூபா 1,500,000 அங்கீகரிக்கப்பட்டதாயினும் செயற்திட்டம் முற்றாக கைவிடப்பட்டுள்ளது. பிரதேச மக்களின் அவசிய தேவை கருதி ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலை கைவிடப்பட்டு நிதியாண்டில் வட்டிவருமானம் பெறும் நோக்கில் ரூபா 8,240,000 தேசிய சேமிப்பு வங்கியில் நிலயான வைப்பிலிடப் பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2.8 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

-----------------------------------------------------

2006 - 2012ம் ஆண்டு உள்;ராட்சி ஆணையாளரினால் வழங்கபபட்ட சனசமூக நிலைய மலசலகூட மற்றும் தொழிற்பாட்டு விருத்திக்கான நன்கொடைகள் ரூபா 1,158,151 குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது நானாவித வைப்பு கணக்கில் கணக்கிடப்பட்டுள்ளது.

2.9 திண்மக் கழிவு முகாமைத்துவம்

-----------------------------------------------------

திணமக் கழிவு அகற்றல் செயற்திட்டத்திற்காக ரூபா 200,000 சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டதேயன்றி அச்செயற்திட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காமை 1987ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை அதிகாரச் சட்டத்தின் 3ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அப்பிரதேச மக்களின் வசதிகளைப் பாதுகாப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கத் தவறியமையினை சுட்டிக் காட்டுகின்றது.

2.10 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------

சபையில் போதிய உள்ளகக் கணக்காய்வு போதியளவு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள், கட்டுப்பாடு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமானசேகரிப்பு

ii. நிலையான சொத்துக்கள்

- iii. கணக்கீடு
- iv. நன்கொடை
- v. மனிதவள முகாமைத்துவம்
- vi. வாகனங்களின் பயன்பாடு
- vii. நானாவித வைப்புக்கள்
- viii. வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு